Tamil

# நான் செய்யலாமா அல்லது செய்யக்கூடாதா?

நவம்பர் 2016 அன்று புதுப்பிக்கப்பட்டது

**நெருப்பைப் பற்றி புகாரளிக்க 000 என்ற எண்ணை அழைக்கவும்**

இந்த வழிகாட்டியில், திறந்த வெளியில் தீ மூட்டுவதற்குச் சட்டப்பூர்வமாகக் கட்டுப்பாடு உள்ளபோது, அறிவிக்கப்பட்ட தீ அபாயக் காலங்களிலும் மற்றும் தீ மூட்டுவதற்கு முழுமையான தடை உள்ள காலங்களிலும் நீங்கள் என்ன செய்யலாம் மற்றும் என்ன செய்யக்கூடாது என்பது குறித்த பொதுவான தகவல் உள்ளது.

CFA, தீ அபாயம் அதிகரிக்கும் காலங்களின்போது விக்டோரியாக் கிராமத்துப் பகுதியில் உள்ள நகராட்சிகள் மூலம் தீ அபாயக் காலங்களை அறிவிக்கிறது. உங்கள் இருப்பிடம் குறித்த, கூடுதல் விவரங்களுக்கு, cfa.vic.gov.au எனும் CFA இணையதளத்தைப் பார்க்கவும். மாநிலக் காடுகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பொதுமக்கள் நிலம் போன்றவற்றில் வருடம் முழுவதும் தீ கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. இந்தப் பகுதிகளில் தீ கட்டுப்பாடுகள் குறித்த அறிவுரையைப் பெற, சுற்றுச்சூழல், நிலம், நீர் மற்றும் திட்டமிடுதல் துறையை (DELWP)த் தொடர்புகொள்ளவும். மேலும், வருடம் முழுவதும் சில இடங்களில் கட்டுப்பாடுகள் இருக்கலாம் என்பதால், உங்களின் நகராட்சியில் சரிபார்த்துக் கொள்ளவும்.

தீ வேகமாகப் பரவி, அதைக் கட்டுப்படுத்துவதற்கு கடினமான நாட்களை முழுமையாகத் தீ மூட்டுவதற்குத் தடைகள் என CFA அறிவித்துள்ளது. தீ அபாயக் காலம் மற்றும் முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில், சட்ட விரோதமாகத் தீ மூடுவதவற்கு, அபராதமாக பெரியத் தொகை விதிக்கப்படலாம் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கப்படவும் சாத்தியமுள்ளது.

## நான் பார்பெக்யூ, கேம்ப் ஃபயர் செய்யலாமா அல்லது சூடாக இருக்க அல்லது கதகதப்புக்காக தீ மூட்டலாமா?





### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- காற்று 10கிமீ/மணிக்கு அதிகமாக இருக்கக்கூடாது (இலைகள் மற்றும் சிறிய கிளைகள் சீரான அசைவில் இருந்தால் இதைத் தெரிந்துகொள்ள லாம்)
- **தீ எரிவதற்காக கட்டப்பட்ட இடத்தில்** அல்லது குறைந்தது 30 சென்டிமீட்டர் ஆழமான பள்ளத்தில் தீ மூட்டப்பட வேண்டும்
- நெருப்பின் வெளிப்புறச் சுற்றளவுகளில் இருந்து 3 மீட்டர் தூரத்தில் இருக்கும் பகுதி மற்றும் நெருப்பின் உச்சிப்புள்ளிக்கு அருகில், தீப்பற்றக்கூடிய பொருட்கள் இருக்க கூடாது
- 1 சதுர மீட்டருக்கு அதிகமான பரப்பளவில் தீ இருக்கக்கூடாது மற்றும் பயன்படுத்தப்படும் திட எரிபொருளின் அளவும் பரிமாணங்களும் இந்த நோக்கத்திற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச அளவில் இருக்க வேண்டும்
- தீ எரியும் போது ஒருவர் எப்போதும் அங்கு இருக்க வேண்டும் மேலும் அவர் தீயை அணைக்கும் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்
- அந்த நபர் வெளியேறும் முன் தீ முற்றிலும் அணைக்கப்பட வேண்டும்

CFA சட்டம் 1958 வரையறுப்பது என்னவெனில், முறையாக-கட்டமைக்கப்பட்ட தீ மூட்டும் இடமென்பது, கல், உலோகம், கான்க்ரீட் அல்லது தீ எல்லையைக் கொண்டிருக்கும் தீ பிடிக்காத பொருள் மூலம் கட்டமைக்கப்பட்ட தீ மூட்டும் இடமாகும். வணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படும் பார்பெக்யூ என்பது முறையாக கட்டமைக்கப்பட்ட தீ மூட்டும் இடமாகக் கருதப்படும்.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில், கேம்ப் ஃபயர்களும், தனிப்பட்ட சௌகரியத்துக்காக அல்லது கதகதப்பிற்காக மூட்டப்படும் அனைத்து தீக்களும் தடைசெய்யப்படும். முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில், திட மற்றும் திரவ எரிபொருள், பார்பெக்யூக்கள் மற்றும் அடுப்புகள் (ஹங்கிஸ் உட்பட) அனைத்தும் முழுமையாகத் தடை செய்யப்படும்.**

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- வாயு அல்லது மின்சாரத்தை மட்டும் பார்பெக்யூ பயன்படுத்துகிறது, மேலும் இது கல், உலோகம், கான்கிரீட் அல்லது மற்ற எரியக்கூடிய தன்மை அல்லாத பொருட்கள் கொண்டு உணவு தயாரிப்பதற்காகப் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டது அல்லது உணவு சமைப்பதற்கென்று பிரத்யேகமாக வடிவமைத்தது மற்றும் வணிக ரீதியாக தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும், (எளிதில் எடுத்துச்செல்லக்கூடிய பார்பெக்யூக்கள் உட்பட) ஒரு நிலையான இடத்தில் வைத்து தீ மூட்டப்பட வேண்டும்
- பார்ப்பெக்யூ உள்ள இடத்தில் இருந்து 3 மீட்டர் தூரத்தில், தீப்பற்றக்கூடிய பொருட்கள் இருக்கக் கூடாது
- உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய வகையில், குழாய் நீர் வழங்கல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது கண்டைனரில் குறைந்தபட்சம் 10 லிட்டர் தண்ணீர் வைத்திருக்க வேண்டும்
- தீ எரிகின்ற அனைத்து சமயத்திலும் குறிப்பிட்ட வயதை எட்டிய நபர் அங்கே இருக்க வேண்டும் மேலும் அவர் தீயை அணைக்கும் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.
- அந்தக் குறிப்பிட்ட வயதை எட்டிய நபர் வெளியேறும் முன் தீ முற்றிலும் அணைக்கப்பட வேண்டும்.

## நான் உணவு தயாரிக்கும் தொழில் செய்கிறேன் (எ.கா. கேட்டரிங்), அல்லது சமூக/தொண்டு நிறுவனம்/நிதி திரட்டும் அமைப்புகளை நடத்துகிறேன். நான் வெளிப்புற நிகழ்ச்சிகளில் பார்பெக்யூ, குக்கர் அல்லது ஹாட்பிளேட் போன்றவற்றை அமைத்து தீ மூட்டலாமா?



### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- காற்று 10கிமீ/மணிக்கு அதிகமாக இருக்கக்கூடாது (இலைகள் மற்றும் சிறிய கிளைகள் சீரான அசைவில் இருந்தால் இதைத் தெரிந்துகொள்ளலாம்)
- **தீ எரிவதற்காக கட்டப்பட்ட இடத்தில்** அல்லது குறைந்தது 30 சென்டிமீட்டர் ஆழமான பள்ளத்தில் தீ மூட்டப்பட வேண்டும்
- நெருப்பின் வெளிப்புறச் சுற்றளவுகளில் இருந்து 3 மீட்டர் தூரத்தில் இருக்கும் பகுதி மற்றும் நெருப்பின் உச்சிப்புள்ளிக்கு அருகில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் இருக்கக்கூடாது
- 1 சதுர மீட்டருக்கு அதிகமான பரப்பளவில் தீ இருக்கக்கூடாது மற்றும் பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவும் பரிமாணங்களும் இந்த நோக்கத்திற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச அளவில் இருக்க வேண்டும்
- தீ எரியும் போது ஒருவர் எப்போதும் அங்கு இருக்க வேண்டும் மேலும் அவர் தீயை அணைக்கும் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்
- அந்த நபர் வெளியேறும் முன் தீ முற்றிலும் அணைக்கப்பட வேண்டும்

இந்த நிபந்தனைகளை உங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லையெனில், மாவட்ட CFA அலுவலகத்திலிருந்து அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**உங்களிடம் CFA, MFB அல்லது DELWP வழங்கிய எழுத்துப்பூர்வமாக அனுமதி மற்றும் அந்த அனுமதியின் நிபந்தனைகளுக்கு இணங்கும் வரை இதைச் செய்யக்கூடாது.**

சமூக நிறுவனம், தொண்டு நிறுவனம் அல்லது நிதி திரட்டுதலில் ஈடுபட்டுள்ள நிறுவனம் (உதாரணமாக, பள்ளி அல்லது விளையாட்டு குழு), தங்களின் வணிகத்தின்போது பிறருக்காக உணவுகள் தயாரிப்பதற்கு நெருப்பை உருவாக்கி கொள்ள அனுமதி கோரலாம். உள்ளூர் CFA மாகாண அதிகாரிகள், CFA தலைமை அலுவலகங்கள், MFB மாகாண அதிகாரிகள் அல்லது தீ தடைசெய்யப்பட்ட பகுதிகளில் DELWP இன் முதன்மை தீயணைப்பு அதிகாரி போன்றவர்களின் விருப்பத்தைப் பொறுத்து இந்த அனுமதிகள் வழங்கப்படும்.

நகராட்சி தீ தடுப்பு அதிகாரிகள் இந்த அனுமதிகளை வழங்க முடியாது.

# நான் செய்யலாமா அல்லது செய்யக்கூடாதா?

**நெருப்பைப் பற்றி புகாரளிக்க 000 என்ற எண்ணை அழைக்கவும்**

## ஹீட் பீட்ஸ், மரக்கட்டை அல்லது பிற திட எரிபொருள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஸ்பிட் ரோடிஸ்ரி முறையில் இறைச்சியை வாட்டலாமா?



### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- காற்று 10கிமீ/மணிக்கு அதிகமாக இருக்கக்கூடாது (இலைகள் மற்றும் சிறிய கிளைகள் சீரான அசைவில் இருந்தால் இதைத் தெரிந்துகொள்ளலாம்)
- **தீ எரிவதற்காக கட்டப்பட்ட இடத்தில்** அல்லது குறைந்தது 30 சென்டிமீட்டர் ஆழமான பள்ளத்தில் தீ மூட்டப்பட வேண்டும்
- நெருப்பின் வெளிப்புறச் சுற்றளவுகளில் இருந்து 3 மீட்டர் தூரத்தில் இருக்கும் பகுதி மற்றும் நெருப்பின் உச்சிப்புள்ளிக்கு அருகில், தீப்பற்றக்கூடிய பொருட்கள் இருக்க வேண்டும்
- 1 சதுர மீட்டருக்கு அதிகமான பரப்பளவில் தீ இருக்கக்கூடாது மற்றும் பயன்படுத்தப்படும் திட எரிபொருளின் அளவும் பரிமாணங்களும் இந்த நோக்கத்திற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச அளவில் இருக்க வேண்டும்
- தீ எரியும் போது ஒருவர் எப்போதும் அங்கு இருக்க வேண்டும் மேலும் அவர் தீயை அணைக்கும் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்
- அந்த நபர் வெளியேறும் முன் தீ முற்றிலும் அணைக்கப்பட வேண்டும்

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**செய்யக்கூடாது**

**முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில் திறந்த வெளியில் திட எரிப்பொருட்களைப் பயன்படுத்தி செய்யும் பார்பெக்யூகளுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளன.**

CFA சட்டம் 1958 வரையறுப்பது என்னவெனில், முறையாக-கட்டமைக்கப்பட்ட தீ மூட்டும் இடமென்பது, கல், உலோகம், கான்க்ரீட் அல்லது தீ எல்லையைக் கொண்டிருக்கும் தீ பிடிக்காத பொருள் மூலம் கட்டமைக்கப்பட்ட தீ மூட்டும் இடமாகும். வணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படும் பார்பெக்யூ என்பது முறையாக கட்டமைக்கப்பட்ட தீ மூட்டும் இடமாகக் கருதப்படும்.

## கேஸ் மூலம் பயன்படுத்தப்படும் வெளிப்புற ஸ்கேரிங் கன்னைப் பயன்படுத்தலாமா?



### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- உங்களிடம் தற்போதைய திட்டம் 14 அனுமதி உள்ளது மற்றும் ஒவ்வொரு நிபந்தனைக்கும் இணங்க வேண்டும்

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**செய்யக்கூடாது**

முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில் கேஸ் அடிப்படையிலான ஸ்கேரிங் கன்களைப் பயன்படுத்த முடியாது.

## புல், பயிர்தாள், களைகள், கீழ்மட்டத்தில் வளரும் தாவரங்கள் அல்லது பிற தாவரங்கள் போன்றவற்றை திறந்த வெளியில் எரிக்கலாமா?



### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- நகராட்சி தீ தடுப்பு அதிகாரி அல்லது CFA மாகாண அதிகாரி வழங்கிய எழுத்துப்பூர்வமான அனுமதி உங்களிடம் இருக்க வேண்டும்
- பொது ஆணையத்தின் தீ தடுப்பு அதிகாரி வழங்கிய எழுத்துப்பூர்வமான அனுமதி உங்களிடம் இருக்க வேண்டும்
- அந்த அனுமதியின் நிபந்தனைகளுடன் நீங்கள் இணங்கி இருக்க வேண்டும்
- தீ எரியும் போது ஒருவர் எப்போதும் அங்கு இருக்க வேண்டும் மேலும் அவர் தீயை அணைக்கும் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்
- அந்த நபர் வெளியேறும் முன் தீ முற்றிலும் அணைக்கப்பட வேண்டும்.

நிறைய மன்றங்களில் உள்ள உள்ளூர் சட்டங்கள், நகராட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் சில நாட்களில் அல்லது சில குறிப்பிட்ட இடங்களில் அல்லது சில நேரங்களில் தீயிடுவதைத் தடுக்கின்றன. நகராட்சி தீ தடுப்பு அதிகாரியிடம் சரிபார்த்து கொள்ளவும்.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**செய்யக்கூடாது**

முழுமையாகத் தீ தடைசெய்யப்பட்ட நாட்களில் புல், புதர், பயிர்தாள், அல்லது குப்பை போன்றவற்றை திறந்த வெளியில் எரிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

நகராட்சி தீ தடுப்பு அதிகாரிகள் வழங்கிய அனைத்து அனுமதிகளும், முழுமையாகத் தீ தடைசெய்யப்பட்ட காலத்தில் இடைநிறுத்தப்படும்.

தீ அபாயக் காலத்திற்கான விதிவிலக்கு அல்லது அனுமதியின் கீழே அனுமதிக்கப்பட்ட தீ மூட்டுதல் உட்பட, ஏற்கனவே உள்ள அனைத்து விதமான தீ மூட்டுதல்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது மற்றும் முழுமையான தீ தடைசெய்யப்பட்ட காலம் தொடங்குவதற்கு முன்னர், அவை முழுமையாக அணைக்கப்பட வேண்டும்.

## பயிர்கள், புல், பயிர்தாள், களைகள், கீழ்மட்டத்தில் வளரும் தாவரங்கள் அல்லது பிற தாவரங்கள் உள்ள இடங்களில் வாகனம் ஓட்டலாமா?

### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- சைலன்ஸிங் சாதனம் வழியாக எஞ்ஜினில் இருந்து அனைத்து வாயுக்களையும் எடுத்துக் கொள்ளும், சிறப்பாக இயங்கும் சைலன்ஸிங் சாதனம் (எ.கா: மஃப்ளர்) வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களாக இல்லை என்றாலும்கூட, வெப்பம் மற்றும் உலர்ந்த சூழல்களில், உலர்ந்த செடிகள் கொண்ட பகுதிகளில் வாகனங்களை ஓட்டுவதைத் தவிர்க்கவும்.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- போதுமான சைலன்ஸிங் சாதனத்துடன் (எ.கா: மஃப்ளர்) பொருத்தப்பட்ட வாகனம், சைலன்ஸிங் சாதனம் வழியாக எஞ்ஜினில் இருந்து அனைத்து வாயுக்களையும் எடுத்துக்கொள்ளும்.

இந்த நாட்காளில் தீ பற்றிக்கொள்ளும் அபாயம் அதனால் ஏற்படும் பாதிப்புகளும் அதிகம் என்பதால், பொருந்தும் இடங்களில் இது தவிர்க்கப்பட வேண்டும்.

# நான் செய்யலாமா அல்லது செய்யக்கூடாதா?

**நெருப்பைப் பற்றி புகாரளிக்க 000 என்ற எண்ணை அழைக்கவும்**

## செயின்சா, செடி அல்லது புல் வெட்டி அல்லது தரை ஊர்தி போன்றவற்றைப் பயன்படுத்தலாமா?





### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- செயின்சா, செடி அல்லது புல் வெட்டி அல்லது தரை ஊர்தி போன்றவை, பசுமையாக இல்லாத சோலையில் (உலர்ந்த தாவரங்கள்) பயன்படுத்தும்போது, பின்வருவனவற்றுடன் இணங்க வேண்டும்
  - தீயை உருவாக்க சாத்தியமுள்ள பழுதுகள் மற்றும் தொழில்நுட்ப சிக்கல் இல்லாமல் இருக்க வேண்டும்
  - சரியாக இயங்கும் தீப்பொறித் தடுப்பான் பொருத்தியிருக்க வேண்டும்
  - எந்திரத்தைச் சுற்றி குறைந்தபட்சம் 3 மீட்டர்களில்தீப்பற்றக்கூடிய பொருளை வைக்கக்கூடாது.

மேலும், எந்திரம் பயன்படுத்தப்படும் எல்லா நேரங்களிலும் ஒருவர் இருக்க வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் பின்வரும் தீயணைப்பு உபகரணங்களில் ஒன்றை வைத்திருக்க வேண்டும்:

- குறைந்தப்பட்சம் செயல்படும் நிலையில் உள்ள ஒரு நேப்சாக் ஸ்ப்ரே பம்ப், முழுதாக தண்ணீர் நிரப்பப்பட்ட (9 லிட்டர்களுக்குக் குறயாமல்) அல்லது
- குறைந்தப்பட்சம் ஒரு தண்ணீர் (அழுத்தமிடப்பட்ட) தீ அணைப்பான், செயல்படும் நிலையில், முழுதாகத் தண்ணீர் நிரப்பப்பட்டு (9 லிட்டர்களுக்கு குறையாமல்) சரியான அழுத்தத்துடன் இருக்க வேண்டும்.

பச்சைத் தாவரங்கள் உள்ள இடங்களில் பணிசெய்வதற்கு அனுமதி உள்ளது, இருப்பினும், மேலே குறிப்பிட்டவாறு உபகரணத்தை வைத்திருக்க மற்றும் தீயணைப்பு உபகரணத்தைக் கொண்டிருக்க, CFA பரிந்துரைக்கிறது.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

இந்த நாட்களில் தீ பற்றிக்கொள்ளும் அபாயம், அதனால் ஏற்படும் பாதிப்புகளும் மிகவும் அதிகம் என்பதால், முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில், பொருந்தும் இடங்களில் இதைத் தவிர்க்கவும்.

தேவையான பணி எனில், தீ அபாயக் காலத்திற்கு அடுத்துள்ள வரிசையில் உள்ள வழிகாட்டிகளைப் பின்பற்றவும்.

மேலே கூறப்பட்டுள்ள தீப்பொறித் தடுப்பான், நேப்சாக் ஸ்ப்ரே மற்றும் தண்ணீர் தீ அணைப்பான்கள் பொருந்தும் ஆஸ்திரேலிய நியமங்களின்படி இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

## இவற்றை செய்யலாமா?

- வெல்டிங், அரைத்தல், எரித்தல், சால்ரிங் அல்லது கேஸ் கட்டிங் செய்தல்
- ரயில் பராமரிப்பு வேலைகள்
- நீலக்கீலை சூடாக்குதல்
- தேனீ புகையூக்கியைப் பயன்படுத்தி தேனீக்களை இடம் மாற்றுதல்
- சூடுபடுத்தி அல்லது தீ போன்றவற்றை பயன்படுத்தி தேனைப் பிரித்தல்



### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

- தீயில் இருந்து பொறிகள், வெப்பமான உலோகங்கள் அல்லது பிசிறு போன்றவற்றைத் தடுக்கும் வகையில் தீ தடுப்பு ஷீட்ல்டு அல்லது பாதுகாப்பு இருக்க வேண்டும்
- பணி செய்யும் இடத்தில் இருந்து குறைந்தபட்சம் 1.5 மீட்டர்களில் தீப்பற்றக்கூடிய பொருள் இருக்கக்கூடாது அல்லது நெருப்பைத் தடுக்கும் வகையில் அந்தப் பகுதி ஈரமாக்கப்பட்டிருக்க வேண்டும்
- நீர் சப்ளை அல்லது குறைந்தபட்சம் 9 லிட்டர் நீரைக் கொண்டிருக்கும் நீர் ஸ்ப்ரே நேப்சாக்குடன் இணைக்கப்பட்ட பைப்பைக் கொண்டிருக்க வேண்டும்
- தீ பற்றாத கன்டெய்னர்களில், பணியின்போது ஏற்பட்ட குப்பைகள் மற்றும் சூடான பொருட்களைச் சேர்க்க வேண்டும்
- தீ எரியும் போது ஒருவர் எப்போதும் அங்கு இருக்க வேண்டும் மேலும் அவர் தீயை அணைக்கும் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்
- அந்த நபர் வெளியேறும் முன் தீ முற்றிலும் அணைக்கப்பட வேண்டும்.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**செய்யக்கூடாது**

**முழுமையாகத் தீ தடைசெய்யப்பட்ட நாட்களில் பின்வரும் செயல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன:**

குறிப்பிட்ட சூழ்நிலைகளில், முழுமையாகத் தீ தடைசெய்யப்பட்ட நாட்களில், பிரிவு 40 அனுமதியை CFA, MFB அல்லது DELWP வழங்கலாம்.

CFA மாகாண அதிகாரிகள், CFA தலைமை அலுவலகங்கள், MFB மாகாண அதிகாரிகள் அல்லது DELWP அதிகாரிகள் போன்றவர்கள் இந்த அனுமதிகளை வழங்குவார்கள். நகராட்சி தீ தடுப்பு அதிகாரிகளால் இவற்றை வழங்க முடியாது.

பிரிவு 40 அனுமதிக்கு எவ்வாறு விண்ணபிக்க வேண்டும் என்பது குறித்து, விவரங்களின் பின் பக்கத்தைப் பார்க்கவும்.

# நான் செய்யலாமா அல்லது செய்யக்கூடாதா?

**நெருப்பைப் பற்றி புகாரளிக்க 000 என்ற எண்ணை அழைக்கவும்**

## எரிதொட்டியைப் பயன்படுத்தலாமா?

### தீ அபாயக் காலத்தின் போது

**இவை இல்லையெனில், செய்யக்கூடாது:**

1. எரிதொட்டியைப் பயன்படுத்துவது குறித்த நிபந்தனைகள், கட்டுப்பாடு அல்லது தடை குறித்து விளக்கப்பட்டுள்ள உள்ளூர் சட்டங்கள் குறித்து மன்றத்துடன் சரிபார்க்கவும் (எ.கா சில இடங்கள், சில பகுதிகள் அல்லது சில நேரங்களில் தடைவிதித்தல்)
2. பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்:
   - எரிதொட்டியில் தீயானது சிறப்பாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்
   - காற்று 10கிமீ/மணிக்கு அதிகமாக இருக்கக்கூடாது (இலைகள் மற்றும் சிறிய கிளைகள் சீரான அசைவில் இருந்தால் இதைத் தெரிந்துகொள்ள லாம்)
   - நிலம் மற்றும் எரிதொட்டியின் வெளிப்புற சுற்றளவில் இருந்து 3 மீட்டர்களுக்கு காற்று இடைவெளி இருக்க வேண்டும்
   - தீ எரியும்போதெல்லாம் அதை அணைக்கும் விதமாக போதுமான தண்ணீர் சப்ளை இருக்க வேண்டும்
   - தீ எரியும் போது ஒருவர் எப்போதும் அங்கு இருக்க வேண்டும் மேலும் அவர் தீயை அணைக்கும் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்
   - அந்த நபர் வெளியேறும் முன் தீ முற்றிலும் அணைக்கப்பட வேண்டும்.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

**செய்யக்கூடாது**

எரிதொட்டியைப் பயன்படுத்துவது, முழுமையாகத் தீ தடைசெய்யப்பட்ட நாட்களில் தடைசெய்யப்படும்.

CFA சட்டம் 1958 எரிப்பதன் மூலம் தேவையற்ற பொருட்களைச் சிதைக்கவும் அகற்றவும் பயன்படுத்திய அல்லது பயன்படுத்தக்கூடிய கட்டமைப்பு அல்லது சாதனம் மற்றும் பின்வரும் கோட்பாடுகள் கொண்ட அமைப்பை எரிதொட்டியாக வரையறுக்கிறது:
- எரியக்கூடிய அளவுக்கு திறன் அல்லாத பொருளால் செய்யப்பட்டு
- தீப்பொறிகளின் உமிழ்வு மற்றும் எம்பர்கள் அல்லது எரியும் பொருட்களில் இருந்து பாதுகாக்க ஷீல்டு அல்லது எளிதில் தீப்பற்றாத பொருளின் பாதுகாப்பு பொருத்தப்பட்டது.

## எந்த பயிர்கள், புல், செதில்கள், களைகள், கீழ்மட்டத்தில் வளரும் தாவரங்கள் அல்லது பிற தாவரங்கள் உள்ள பகுதிகளில், 9 மீட்டருக்குள் சுயமாக இயக்கப்படும் பண்ணை இயந்திரங்கள், டிராக்டர்கள், ஸ்லாஷர்ஸ், புவியில்-நகரும், அகழ்வளிக்கும் அல்லது சாலை தயாரித்தல் இயந்திரங்களை நான் பயன்படுத்தலாமா?

### தீ அபாயக் காலத்தின் போது

**இல்லை, இந்தச் சூழல் உள்ள இயந்திரங்களைத் தவிர:**

- தீயை உருவாக்க சாத்தியமுள்ள பழுதுகள் மற்றும் தொழில்நுட்ப சிக்கல் இல்லாமல் இருக்க வேண்டும்
- செயல்படும் தீப்பொறித் தடுப்பான், ஒரு டர்போ சார்ஜர் அல்லது வெளியேற்ற காற்றிழுப்பு ஏர் கிளீனரானதுபொருத்தப்பட்டுள்ளது
- நெருப்பு அடக்குமுறை உபகரணங்களை உள்ளடக்கியது:
  - குறைந்தபட்சம் செயல்படும் நிலையில் உள்ள ஒரு நேப்சாக் ஸ்ப்ரே, முழுதாகத் தண்ணீர் சேகரிக்கப்பட்டு 9 லிட்டர்களுக்குக் குறைவாக அல்லது
  - at least குறைந்தபட்சம் ஒரு தண்ணீர் (அழுத்தமிடப்பட்ட) தீ அணைப்பான், செயல்படும் நிலையில், முழுதாகத் தண்ணீர் நிரப்பப்பட்டு (9 லிட்டர்களுக்கு குறையாமல்) சரியான அழுத்தத்துடன் இருக்க வேண்டும்.

### முழுமையாகத் தீ தடைசெய்யப்படும் நாட்களில்

இந்த நாட்காளில் தீ பற்றிக்கொள்ளும் அபாயம் அதனால் ஏற்படும் பாதிப்புகளும் அதிகம் என்பதால், பொருந்தும் இடங்களில் இதைத் தவிர்க்கப்பட வேண்டும்.

இந்த வேலை அத்தியாவசம் என்றால், அருகே நெடுவரிசையில் உள்ள தீ அபாயக் காலத்தின் போது செய்ய வேண்டிய வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள தீப்பொறித் தடுப்பான், நேப்சாக் ஸ்ப்ரே மற்றும் தண்ணீர் தீ அணைப்பான்கள் பொருந்தும் ஆஸ்திரேலிய நியமங்களின்படி இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

தீயுடன் வேலை செய்யும் தனிப்பட்ட நபர் ஒவ்வொருவரும் தீயின் கட்டுப்பாட்டு சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்பது கடமையாகும்.

நெருப்பைப் பயன்படுத்தும் நபர் அவர்களால் வேறு எந்த பொருட்களுக்கும் சேதம் ஏற்படாது என்பதில் கவனம்கொள்ள வேண்டும். வேண்டுமென்றே அல்லது பொறுப்பற்ற முறையில் தீ மூட்டுவது, பராமரிப்பது அல்லது தீயைக் கட்டுப்படுத்த தவறியதுடன் அதை வேறு பொருட்களில் பரவவிடுவது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு குற்றங்கள் சட்டம் 1958 (விக்.) சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும்.

**எனது பொருட்களை எரிக்க திட்டமிட்டுள்ளேன். நான் எவ்வாறு அவசர சேவைகளுக்கு அறிவிப்பு அளிக்க முடியும்?**

CFA அல்லது நகராட்சி தீ தடுப்பு அதிகாரி மூலம் உங்களுக்கு எரிக்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அல்லது அனுமதி வழங்கும் நிம்பந்தனைகளுக்குப் பொருந்தும் ஒருவரிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்தால் அவசரச் சேவைகள் தொலைத்தொடர்பு ஆணையத்திடம் (Emergency Services Telecommunications Authority, ESTA) 1800 668 511 என்ற எண்ணில் முன்னதாக அறிவிக்க வேண்டும்.

**மேலும் தகவலோ அல்லது அனுமதியை நான் எவ்வாறு பெறுவது?**

இந்த வழிகாட்டியைப் பற்றிய ஏதாவது விளக்கத்திற்கு அல்லது கூடுதல் தகவலுக்கு, அல்லது அனுமதி விண்ணப்பப் படிவத்தைப் பெறுவதற்கு, cfa.vic.gov.au ஐப் பார்க்கவும், உள்ளூரில் உள்ள CFA மாவட்ட தலைமையகத்தை (03) 9262 8444 தொடர்புக்கொள்ளவும். CFA இணையதளத்தில் CFA மாவட்ட தலைமையகத்தைச் சேர்ந்தவர்களின் எண்கள் கிடைக்கும்.

உங்களுக்கு பெருநகர தீ மாவட்டத்தில் செயல்பட அனுமதி தேவைப்பட்டால் MFB ஐ (03) 9662 2311 இந்த எண்ணிற்கோ அல்லது mfb.vic.gov.au இணைப்பிலோ தொடர்புக்கொள்ளலாம்.

பல நகராட்சிகளில், வடகிழக்கு மற்றும் கிழக்கு மெல்போர்னில், DELWP இன் தீ கட்டுப்பாடுகள் பொது நில எல்லைக்குள் 1.5 கி.மீட்டருக்குள் பொருந்தும். மேலும் விவரங்களுக்கு DELWP இணையதளத்தைப் பார்க்கவும்.

அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனில், DELWP ஐ 136 186 அல்லது delwp.vic.gov.au தொடர்புக்கொள்ளலாம்.